செ.வெ.எண்.09 நாள்.05.12.2017

**பத்திரிக்கை செய்தி**

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் நாளை (06.12.2017) பகல் 12.45 மணிக்கு நடைபெறும் 25வது பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் தலைமையேற்று பட்டமளிக்க உள்ளார்கள்.

அதன் பின்னர், திருநெல்வேலி வண்ணார்பேட்டை அரசினர் விருந்தினர் மாளிகைக்கு வருகை தரும் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் மக்கள் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சி பிரமுகர்கள், பொது நல அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களை நேரில் சந்திக்க உள்ளார்கள்.

எனவே, மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களை சந்திக்க விருப்பமுள்ள மக்கள் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் பொது நல அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் மாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களை நேரில் சந்திக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி**